1978 மார்ச் 14]

உதகமண்டலத்தில் கலை அரங்கம்.

*554 வினா—திரு. போ. கோபாலன் : மாண்புமிகு செய்தி-சுற்றுலாதுறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உதகமண்டலத்தில் கோடைக்கால விழாக்கள் மற்றும் அரசாங்க விழாக்கள் நடத்திட ஒரு கலை அரங்கம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இல்லை.

திரு. போ. கோபாலன் : தலைவர் அவர்களே, உதகமண்டலம் அதிகமாக பயணிகள் வரக்கூடிய கோடை வாசஸ்தலமாக—ஆண்டில் செப்டம்பர், மார்ச், ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் வரக்கூடியதாக இருக்கிறது. அப்போது கலை விழாக்கள் நடைபெறுகின்றன. அந்த விழாக்கள் அத்தனையும், அண்ணா ஸ்டேடியம் என்று சொல்லப்படுகின்ற விளையாட்டு மைதானத்திலே ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து நடைபெறுவதால் அந்தக் காலங்களில் விளையாட்டு வீரர்கள் பயிற்சி பெறுவதற்கு தடை ஏற்படுகிறது. இதை உணர்ந்து கலை நிகழ்ச்சிகளை நடத்துவதற்காக ஒரு தனி கலையரங்கம் ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, உதகமண்டலம் மாத்திரமல்ல. மாவட்டங்களின் தலைநகரங்களிலே மட்டுமாவது இதுபோன்ற பொது நிகழ்ச்சிகளுக்கு பயன்படுவதற்கு கலை அரங்கங்கள் கட்டப்பட வேண்டுமென்பதுதான் இந்த அரசின் திட்டம். இதையொட்டி, உதகமண்டலத்தின் தேவையும் பரிசீலிக்கப்படும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே கம்பர், வள்ளலார் போன்றவர்களுக்கு நினைவாலயம் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கம்பர் வாழ்ந்த இடமாகிய தேரெழுந்தூரில் அந்தமாதிரி நினைவாலயம் ஒன்று ஏற்படுத்துவதற்கு இந்த அரசு முன்வருமா ? அதோடு.. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கலை அரங்கத்தைப் பற்றிய கேள்வி.

திரு. இரெ. இராசமாணிக்கம் : கம்பர் நினைவாலயம் அமைப்பதற்காக தமிழகத்தில் முன்னாள் ஆளுநராக இருந்த பிரகாசம் அவர்கள் 10—10—1954-லே அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். இதை கவனத்திலே கொண்டு இந்த அரசு என்னுடைய தொகுதியாகிய தேரெழுந்தூரில் அத்தகைய நினைவாலயம் அமைப்பதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1978 மார்ச் 14

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு தொடர்பான கேள்வி இல்லையென்றாலும், புதிய தகவல் ஒன்றை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித் திருக்கின்றார்கள். கம்பருடைய நினைவாலயம் ஒன்றை அங்கே அமைப்பதிலே மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப் பினர் அக்கறை தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, இந்த முக்கிய மான விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு அரசு பரிசீலனை செய்யும்.

திரு. க. மருதாசலம்: தலைவர் அவர்களே, உதகமண்டலத் திலே கோடை காலங்களில் ஏராளமான மக்கள் வருகிறார்கள். அப்படி வருகின்ற காரணத்தால், அங்கே வருகின்ற மக்கள் அங்கே நடைபெறும் கலை நிகழ்ச்சிகளை தங்கி பார்ப்பதற்க்கு இட வசதி இல்லாமல் இருக்கிறது. 100, 200, 500 ரூபாய் கொடுத்தாலும் இடம் கிடைக்காத நிலை இருக்கிறது. அப்பேர்ப்பட்ட நிலைமை களைப் போக்க நம்முடைய சுற்றுலாத் துறையின் மூலம் தங்கு வதற்கு குறைந்த வாடகையில் இடவசதி செய்து தர முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இது கலை அரங் கத்தைப் பற்றிய கேள்வி. கலை அரங்கத்தைக் கட்டுவது பற்றித் திட்டமிடப்படுகிறது என்று சொல்லியிருக்கிறேன். என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி நான் பொறுப்பில் இருக்கும் துறையில் இருக்கும் காரணத்தால் அதற்கும் பதில் சொல்லிவிடுகிறேன். நடுத்தர மக்கள் தங்குவதற்கேற்ற வகையில் இருப்பிடங்கள் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்காக விடுதிகள் கட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. செ. சிவசாமி: மாவட்டத் தலைநகரங்களில் கலை அரங்கம் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் முகவை மாவட்டத்திற்குத் தலைநகரமே இல்லாத காரணத்தால் அங்கு எங்கு இந்தக் கலையரங்கம் அமைக்கப்படும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து உறுப்பினர் கள் மூலக் கேள்வியை ஒட்டி துணைக் கேள்விகள் கேட்க வேண்டும். மூலக் கேள்வி உதகமண்டலத்தில் கலை அரங்கம் அமைப்பதைப் பற்றியது. இதையொட்டிய கேள்விகளுக்குத்தான் அமைச்சரிடம் விவரம் இருக்கும்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: அந்த மாவட்டத்திற் கென்று தனித் தலைநகரம் அந்த மாவட்டதிற்குள்ளே இல்லை என்றாலும் அந்த மாவட்டத்திற்குள்ளே எது முக்கியமான நகரம் என்று தெரிந்து அங்கே அமைக்கலாம்.

1978 மார்ச் 14]

திரு. கே. உச்சி : உதகையில் கலையரங்கம் ஏற்படுத்துவது பற்றிப் பரிசீலிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பரிசீலனையைக் கொஞ்சம் வேகமாகச் செய்து இந்த ஆண்டே அமைச்சர் முன்னிலையில் தொடங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு உறுப்பினர்கள் விரும்புகிறபடி பரிசீலிக்க வேண்டிய பிரச்சினைகள் இருக்கும்போதுதான் வேறுபல பிரச்சினைகளைப் பரிசீலிக்க வேண்டிய நெருக்கடிக்கு அரசு ஆளாகிக் கொண்டிருக்கிறது. இதெல்லாம் தீர்ந்த பிறகுதான் அவைகளைப் பற்றி பரிசீலிக்க முடியும்.

தொழிலாளர் துறையில் வேலைவாய்ப்பு.

*555 வினா—திரு. கே. சுப்பிரவேலு : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தொழிலாளர் துறையில் தற்போது பணியாற்றுபவர்களில், தொழிலாளர் அலுவலர், உதவி ஆய்வாளர், உதவி தொழில் ஆய்வாளர், துணை ஆய்வாளர்கள் எத்தனை பேர் ?

(ஆ) இதில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் எத்தனை பேர் ?

(இ) விகிதாச்சார முறையான 18 சதவிகிதம் உள்ளதா ?

(ஈ) இல்லையேல் அரசின் எதிர்கால நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) முதல் (ஈ) வரை: பேரவைமுன் விவர அறிக்கை* ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. சுப்பிரவேலு : தொழிலாளர் துறையில் இருக்கின்ற ஊழியர்களில் 18 விழுக்காடு தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்குக் கொடுக்கப்படவில்லை என்ற குறைபாடு இருக்கிறது என்று மக்கள் மத்தியில் தகவல் இருக்கிறது. இதைத் தீர்ப்பதற்கு மத்திய சர்க்காரில் எஸ்.சி. மற்றும் எஸ்.டி. காக ஜாயிண்ட் செலக்ட் கமிட்டி போட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட கமிட்டியை நம்முடைய அரசும் அமைக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : வேலைக்கு எடுக்கும்போது 18 சதவிகிதம் தாழ்த்தப்பட்டவர்களுக்குத தரப்படுகிறது. மாறுபட்ட தகவல் இருந்தாலும் அதுபற்றி எனக்கு எழுதிக் கொடுத்தால் அதை நான் பரிசீலிக்கிறேன்.

---

*491–492ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது]